தினமணி

**விண்ணைத் தொடும் விலைவாசி**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 01 Feb 2011 12:40:36 AM IST

கைப்பேசி வைத்துள்ள பலருக்கு விஜயகாந்தின் மீன்கதை எஸ்.எம்.எஸ். மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அக்கதையை மேலும் மெருகூட்டிப் பார்க்கலாம். ஞாயிற்றுக்கிழமைகளில் இறைச்சிக் கடையில் கூட்டத்துக்குப் பஞ்சமே இருக்காது. இறைச்சி விலை தாறுமாறாக ஏறிவிட்டதால் இப்போது கூட்டம் குறைந்துவிட்டது. நண்பர் விலை கேட்டார். கிலோ ரூ. 300-க்கு செம்மறிஆடுதான். ரூ. 400 இருந்தால் வெள்ளாட்டுக்கறி. இப்போது ஐயப்பர் சபரிமலை சீசன் முடிந்துவிட்ட நிலையிலும் விலை இறங்கவில்லை என்கிறார் இறைச்சிக் கடைக்காரர். மீன் விலை கேட்டார். கட்லா ரூ. 200 என்றதும் மயங்கிவிட்டார். நாட்டுக்கோழியும் கிலோ ரூ. 300 கூடுதல் விலை. வெள்ளைக்கோழி விலை நூறுதான். இந்த சீக்குக் கோழியை உண்பதைவிட சும்மா இருக்கலாம் என்று அலுத்துப்போன நண்பர், ஒரு தூண்டில் தயார் செய்து குளத்தில் மீன்பிடிக்கப் போனார். சிக்கின சில கெண்டைகள். வீட்டுக்கு வந்த நண்பர் மனைவியை அழைத்து மீன்குழம்பு வைக்கச் சொன்னார். அதற்கு அந்த அம்மணி, "" சாமி நான் கடையிலே சாமான் வாங்கப் போனேன். வெங்காயம் கிலோ ரூ. 100, பூண்டு கிலோ ரூ. 600, கசகசா கிலோ ரூ. 300, தேங்காய்1 ரூ. 10, சீரகம் கிலோ ரூ. 400, ரூ. 150-க்குக் குறைவாக எந்தச் சமையல் எண்ணெயும் இல்லை. துவரம்பருப்பு வாங்கப் போனேன், எந்தப் பருப்பு வாங்கினாலும் கிலோ 100 ரூபாயாம். விறகு கிலோ ரூ. 10 - கேஸ் இல்லை. மண்ணெண்ணெய் இல்லை. எப்படி சாமி சமைப்பது?"

""சரி, அம்மணி இந்த மீனை என்ன செய்ய?"

"" நீங்க குளத்திலேயே விட்டுடுங்க சாமி"

அந்த நண்பர் மீண்டும் குளத்துக்குச் சென்று கெண்டை மீன்களைக் குளத்தில்விட்டார். அப்போது அம்மீன்கள் பேசினவாம்:

""கலைஞரின் உயிர்காக்கும் திட்டம் வாழ்க"

இந்தியாவில் உணவுப் பொருள் விலை ஏற்றத்துக்கு இரண்டு, மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. முதலாவது, பணவீக்கம். அதாவது, இன்ஃப்ளேஷன். இரண்டாவது, பற்றாக்குறை. மூன்றாவது காரணமும் உண்டு. போக்குவரத்துச் செலவு.

பணவீக்கம் மொத்தவிலைக் குறியீட்டெண்ணால்தான் அளவிடப்படுகிறது. கடந்த ஓராண்டில் மொத்த விலைக்குறியீட்டெண் - ஹோல் சேல்ஸ் பிரைஸ் இண்டக்ஸ் - 10 சதவீதம் உயர்ந்துள்ளது. உண்மையில் சில்லறை விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கவனித்தால் பணவீக்கம் 30 சதவீதம் உயர வாய்ப்பு உள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்னைகளுக்குக் கலைஞர், பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதங்கள் எழுதுவதுபோல் நமது பிரதமரும், ""இன்னும் ஒரே மாதத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவோம். விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம்" என்று கி.பி. 2009-லிருந்து மாதம் ஓர் அறிக்கை விடுகிறார். பத்திரிகை நிருபர்களுக்குச் செய்திகள் வழங்கியவண்ணம் உள்ளார். விலைவாசியைக் குறைக்க அவர்களும் படாதபாடு படுகிறார்கள். மத்திய அரசின் சார்பில் முதல் பொருளாதார ஆலோசகர் கௌஷிக் பாசு, விலைவாசி குறைய அறிக்கை வழங்குவதில் நிபுணராயுள்ளார். நிதி அமைச்சர் அறிக்கை விடுவார். திட்டக்கமிஷன் துணைத்தலைவர் அறிக்கை விடுவார். விலைவாசி விஷம்போல் ஏறுவதை அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி புதுதில்லியில் ஏ.சி. அறையில் உட்கார்ந்து கொண்டு தாகம் ஏற்பட்டால் பெப்சி வழங்கும் மினரல் வாட்டரைக் குடித்தவண்ணம் அடிக்கடி ஒன்றுகூடி அமைச்சர்களும் அரசுச் செயலர்களும் கோப்புகளைப் பார்த்து என்ன பயன்?

உணவு உற்பத்தி உயர விவசாயம் செய்கிறார்களா? விவசாயம் செய்யப் போதிய நிலம் உள்ளதா? உற்பத்தி குறைவது ஏன்? மண்வளம் இழப்பது ஏன்? மண்ணை வளப்படுத்தி வளம்குன்றா விவசாயம் செய்ய என்ன செய்யலாம்? விவசாயிகளின் பிரச்னைகள் என்ன? வேலைக்கு ஆள்கள் கிடைக்காதது ஏன்? நிலம் இருந்தாலும் போதிய பாசன நீர் உள்ளதா? மேல்மட்டக் கிணறு, ஏரி, குளங்களை நிரப்புவது எப்படி? என்று பல கேள்விகளுக்கு அமைச்சர்களும் அதிகாரிகளும் பொறுப்புடன் பதில்களை வழங்க அவர்கள் களத்தில் இறங்கவேண்டும். நேரடியாகப் பல கிராமங்களுக்குச் சென்று கிராமங்களில் அதிக நேரம் செலவழிக்க வேண்டும்.

வாரம் ஒருநாள் மாவட்ட ஆட்சித்தலைவர் விவசாயிகளைச் சந்தித்துப் பேசுவது போதாது. விவசாயிகளைத் தேடி ஆட்சியாளர்கள் வந்து நேரில் பார்த்தால்தான் பிரச்னைகள் புரியும். நமது மத்திய விவசாய அமைச்சரைப் பொருத்தவரை விளைநிலங்கள் கிரிக்கெட் மைதானங்களாக மாறவேண்டும். விமானநிலையங்களாக வேண்டும். எண்வழிச் சாலைகளாக வேண்டும். ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சென்று நிலம் வாங்கி பருப்பு, புஞ்சை தானியங்களைச் சாகுபடி செய்யலாம் என்று அற்புத யோசனைகளைக் கூறுகிறாரே தவிர, உள்ளூரில் உற்பத்தி உயர வழி செய்வது இல்லை.

இந்தியாவில் இப்போது அந்நியச் செலாவணி கணிசமாக உள்ளது என்பதால் என்ன பிரச்னை வந்தாலும், உணவு விலை சிகரத்தைத் தொட்டாலும் இறக்குமதி செய்து சரிசெய்து விடலாம் என்று தப்புக்கணக்குப் போட்டதால் வரும் வினைகள் இவை. வெங்காயம் பாகிஸ்தானில் விளைகிறது. தக்காளி அமெரிக்காவில் விளைகிறது. துவரை கென்யாவிலும் தான்சேனியாவிலும் விளைகிறது. உளுந்து பர்மாவில் உண்டு. கபூலி சென்னா (வெள்ளைக்கடலை) காபூலில், ஆஸ்திரேலியாவில், துருக்கியில் விளைகிறது. (கருப்புக்கடலை இந்தியாவில்தான் விளைகிறது)

பட்டாணிக்கு ஆஸ்திரேலியா, அமெரிக்காவில் கோதுமை, தாய்லாந்தில் அரிசி, பிலிப்பைன்ஸில் தேங்காய், பிரேசிலில் வேர்க்கடலை, சீனத்தில் எள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சூரியகாந்தி கோப்புகளில் உள்ள விவரங்கள் இப்படித்தான் பேசும்.

எந்த நாட்டிலிருந்து எவ்வளவு இறக்குமதி செய்யலாம்? என்று படித்துவிட்டு அமைச்சர்கள் யோசிக்கிறார்கள். நிலைமை முன்பு மாதிரி இல்லை. ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் வரலாறு காணாத வெள்ளம் உணவு உற்பத்தியைப் பாதித்துவிட்டது. அந்தந்த நாடுகளிலும் போதிய வழங்கல் இல்லை.

பணவீக்கம் ஏன்? பணவீக்கம் பற்றாக்குறை பட்ஜெட்டால் ஏற்படுகிறது. வரவுக்கு மேல் செலவு செய்யும்போது செலவைச் சமாளிக்க கூடுதலாக ரூபாய் நோட்டுகள் அச்சடிக்கப்படுகின்றன. இதனால் பணப்புழக்கம் அதிகமாகிறது. பணப்புழக்கம் உற்பத்திக்கு வழிவகுத்து செலவு வரவாகும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுவதுண்டு. ஆனால், அப்படி நிகழ்வதில்லை.

கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய வேலைக்காப்புறுதித்திட்டம் - நூறு நாள் வேலைவாய்ப்புக்காக பணம் புழங்குகிறது. இரண்டாவதாக, மகளிர் சுயஉதவிக்குழு மூலம் உறுப்பினர்களுக்கு 1 வட்டிக்கடன் வழங்குவதன் மூலம் பணப்புழக்கம் உள்ளது. உண்மையில், இப் பணப்புழக்கத்தால் விவசாயத்தில் உற்பத்தி உயர வேண்டும். நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்டம் உண்மையில் விவசாயத்துக்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்திவிட்டது. வேலை செய்யாமலேயே நூறுநாள் சம்பளம் கிடைத்துவிடுகிறது.

ஒரு மணிநேரம் உருப்படியாக வேலை செய்தால் பெரிய விஷயம். இந்த வேடிக்கையை தினம் பார்க்கிறேன். மகளிர் சுயஉதவிக்குழுவுக்கு வழங்கப்படும் "மைக்ரோ ஃபைனான்ஸ்" கிராமங்களில் சிலர் மட்டுமே கந்துவட்டி செய்த காலம் போய், கந்துவட்டி பெரிய அளவில் பெண்களின் தொழிலாக மாறிவிட்டது. யாரும் விவசாயத்துக்கோ, வேறு தொழில் உற்பத்திக்கோ சுய உதவிக்குழுவின் பணம் முதலீடுகளாக மாறிப் பயன் தராமல், உபயோகமற்ற செலவுகளுக்கே உதவுகிறது. கந்துவட்டிப் பெண்களிடம் மாட்டுபவர்களுக்கு வேறு நரகம் வேண்டாம்.

மேற்படி விஷயத்தை இங்கு நான் கூறுவதற்கு வேறு காரணமும் உண்டு. நூறு நாள் வேலைத்திட்டத்தில் ஏழைகள் பணக்காரர்களாகி அவர்கள் தேவை உயர்ந்துவிட்டதால் விலை உயர்ந்துவிட்டதாம். விலை ஏற்றத்துக்கும் நூறுநாள் வேலைத்திட்டத்துக்கும் நிபுணர்கள் இப்படி முடிச்சுப் போடுகின்றனர்.

உண்மையில் அப்படிப் பெற்ற பணம் கந்துவட்டிக்குப் போகிறதே தவிர, வெள்ளைப்பூண்டும், வெங்காயமும், தக்காளிப் பழத்தையும் அப்போதும் வாங்கினார்கள். இப்போதும் வாங்குகிறார்கள்.

பணம் எங்குதான் புழங்கவில்லை? திட்டமிடப்பட்ட பல செலவுகளுக்கும்தான் பணம் புழங்குகிறது. கருப்புப்பணம் எங்கெல்லாமோ புழங்குகிறது. பணப்புழக்கத்தால் பணமதிப்பு

குறைந்து பொருள்விலை கூடுவது இயல்பு. அமைப்புரீதியான தொழிலாளர்கள், அலுவலர்கள், பணியாளர்கள் சம்பளம், டி.ஏ. உயர்வு காரணமாகவும் பணம் புழங்கி வீக்கமடையவில்லையா?

ஆனால், அடிப்படையான விஷயம் தேவைக்கு ஏற்ப ஒரு பொருளின் வழங்கல் இல்லாததுவே. அதாவது பொருளின் பற்றாக்குறை. பொருளின் பற்றாக்குறையுடன் பணவீக்கமும் சேர்ந்து எட்டமுடியாதபடி விலைஉயர்வு விண்ணை நோக்கிப் போய்க் கொண்டுள்ளது.

பணவீக்கத்துக்கு நிகராகப் பொருள் உற்பத்தி உயர்ந்தால் விலை ஏறுவது கட்டுப்படும். உணவுப்பொருள் விஷயத்தில் அரிசி, கோதுமைபோல் மக்காச்சோளத்துக்கு விலைக்கட்டுப்பாடு இல்லை. மக்காச்சோளம் ஏற்றுமதியும் ஆகிறது. ஆனால், மக்காச்சோளத்தின் விலை ஏற்றம் குறைவு. சில்லறை விலை ரூ. 13 அல்லது ரூ. 14 தான். கடந்த ஆண்டு வரையில் ரூ. 12 தான். மக்காச்சோளத்தின் முக்கியத்தேவை கோழி - மாட்டுத்தீவனம். பின் மனிதத்தேவை. மக்காச்சோளம் உற்பத்தி பெருகியதைப்போல் வெள்ளைச்சோளம், கம்பு, ராகி, தினை, வரகு, உளுந்து, துவரை, கடலை, பாசிப்பயறு, மசூர், பட்டாணி உற்பத்திகள் ஏன் உயரவில்லை?

பணவீக்கம் விலை ஏற்றத்துக்குரிய காரணம் என்றால் நோட்டு அச்சடிப்பதையும், கருப்புப்பணத்தையும் நிறுத்தினால் போதுமே. அமைப்புரீதியான பணக்காரத் தொழிலாளர்களாயினும், அமைப்புரீதியற்ற ஏழைத் தொழிலாளர்களும் சரி, வரக்கூடிய வருமானம் அனைத்தையும் உணவு வாங்கச் செலவழிப்பதில்லை. ஒருசாரார் டாஸ்மாக் கடைகளில் சாராயத்துக்குச் செலவழிக்கிறார்கள். ஒருசாரார் மருத்துவத்துக்குச் செலவழிக்கிறார்கள். மருத்துவத் தேவை, குடித்தேவை மற்றும் வேலை வாங்க லஞ்சம் கொடுக்கும் புதிய தேவைகளுக்காக ஒருசாரார் கந்துவட்டிக்குப் பணம் வழங்குகிறார்கள். சிலர் கல்வித் தேவைக்கும் கந்துவட்டிக்குப் பணம் வாங்கலாம்.

பணவீக்கத்தில் பணத்தின் தேவைதான் அதிகமாகிப் பணமே ஒரு பொருளானதே தவிர, உண்மையான வேளாண் உற்பத்தி உயரவில்லை. வேளாண் உற்பத்திக்குரிய வழிமுறைகளை நன்கு திட்டமிட வேண்டும். அதேசமயம், மண்வளத்தையும் காப்பாற்ற வேண்டும். அப்போதுதான் வழங்கல் பெருகி விலைவாசி குறையும்.

## அழிவை நோக்கி விவசாயத் தொழில்?

எம்.சுந்தரமூர்த்தி

First Published : 01 Feb 2011 01:45:06 AM IST



பொன்னேரி அருகே விவசாய கிராமமாக விளங்கி வந்த ஆலாடு கிராமத்தில் உள்ள விவசாய விளைநிலத்தில் மனைகளுக்காக நடப்பட்டுள்ள கற்கள்.

பொன்னேரி, ஜன. 31: பொன்னேரி தாலுகாவில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் வீட்டுமனைகளாகவும், தொழில் நிறுவனங்களாகவும் மாறி வருவதன் காரணமாக இப்பகுதியில் விவசாயத் தொழில் வேகமாக அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி தாலுகா சென்னை புறநகர் பகுதியை ஒட்டியுள்ளது.

பொன்னேரி தாலுகாவில் சோழவரம், மீஞ்சூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களும், ஆரணி, மீஞ்சூர், பொன்னேரி ஆகிய மூன்று பேரூராட்சிகள் மற்றும் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் அமைந்துள்ளன.

இதில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இதில் காட்டுபள்ளி, காளாஞ்சி, பழவேற்காடு ஆகிய பகுதிகள் கடலோரப் பகுதிகளாக விளங்கி வருகிறது. கடலோரப் பகுதியில் உள்ள 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். அதே போன்று ஆரணி பேரூராட்சிக்குட்ட பகுதியில் வசிக்கும் மக்கள் நெசவு தொழில் செய்து வருகின்றனர். மீஞ்சூர், பொன்னேரி, சோழவரம் பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் பகுதியில் உள்ள விளைநிலங்களில் 10ஆண்டுகளுக்கு முன்பு வரை விவசாயத் தொழில் செய்து வந்துள்ளனர்.

மீஞ்சூர் பகுதியை ஒட்டி 100-க்கும் மேற்பட்ட தனியார் கன்டெய்னர் கிடங்குகள் வந்ததன் காரணமாக மீஞ்சூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயத் தொழில் முடங்கி போனது.

அதே போன்று அனுப்பம்பட்டு, தேவதானம், காணியம்பாக்கம், மெரட்டூர், தோட்டக்காடு, வாயலூர், திருவெள்ளைவாயல், ஊரணம்மேடு உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கடல் நீர் மட்டம் உயர்ந்ததன் காரணமாக அப்பகுதியில் விவசாயத் தொழில் அழியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் அப்பகுதியில் குடிநீர் உவர்ப்பு நீராக மாறியதால் சிறுவாக்கம் கிராமத்தில் உள்ள கொசஸ்தலை ஆற்றின் கரையோரம் 4 ஆழ்துளை மோட்டார்கள் அமைக்கப்பட்டு அனுப்பம்பட்டு கூட்டு குடிநீர் திட்டம் மூலம் மேற்கண்ட கிராமங்களுக்கு குடிநீர் வாரியம் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. சோழவரம் பகுதியை ஓட்டி செங்குன்றம் அமைந்துள்ளதால் அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் அனைத்தும் வீட்டுமனைகளாக மாறி வருகிறது. அதே போன்று பொன்னேரியில் 30-க்கும் மேற்பட்ட அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு, தனியார் கல்லூரிகள் அமைந்துள்ளது.

இதனால் பொன்னேரி இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் ரியல் எஸ்டேட் இடைத்தரகர்களால் வாங்கப்பட்டு அவைகள் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு வருகிறது. வீட்டுமனைகளாக மாறிவரும் விவசாய விளை நிலங்கள், புதிதாக தொடங்கப்படும் அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் காரணமாக பொன்னேரி தாலுகாவில் விவசாயம் செய்வதற்கு விளைநிலங்களே இல்லாத நிலை உருவாகும் காலம் வெகு தொலைவில் இல்லை என அப்பகுதியில் வசிக்கும் சமூக நல ஆர்வலர்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

ஏற்கெனவே 100 நாள் வேலை உறுதி திட்டத்தால் விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை, மேலும் பருவம் தவறி பெய்யும் மழையால் அழுகி போகும் நெல் பயிர்கள் உள்ளிட்டவைகளால் விவசாயத் தொழில் செய்து வரும் விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்ற பழமொழிக்கேற்ப விளைநிலங்கள் இருந்தால்தான் விவசாயம் செய்ய முடியும். விவசாயிகள் பயிரிடவில்லை என்றால் மக்கள் பசியை தீர்ப்பது எப்படி?

எனவே பொன்னேரி தாலுகாவில் அழிந்து வரும் விவசாயத்தை காப்பாற்ற அனுப்பம்பட்டு பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயர அப்பகுதியில் உள்ள ஏரி மற்றும் குளங்களை பராமரிப்பு செய்து தூர்வார வேண்டும்.

மேலும் அப்பகுதியில் புதிதாக குளங்களை அமைக்க வேண்டும். அத்துடன் சோழவரம், பொன்னேரி பகுதியில் நாள்தோறும் விளை நிலங்கள் வீட்டுமனைகளாக உருவாகி வருவதை கட்டுப்படுத்த அரசு தவறினால் எதிர்காலத்தில் இப்பகுதியில் உள்ள விளைநிலங்கள் அனைத்தும் வீட்டுமனைகளாக மாறி பொன்னேரி தாலுகாவில் விவசாயம் முற்றிலும் அழிந்து போகும் நிலை உருவாகும்.

**ரூ. 30-க்கு உளுந்து, துவரை: ரேஷன் கடைகளில் இன்றுமுதல் விற்பனை**

First Published : 01 Feb 2011 12:55:54 AM IST



சென்னை, ஜன. 31: ரேஷன் கடைகளில் உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு கிலோ ரூ. 30-க்கு விற்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது.

அதன்படி தமிழகம் முழுவதும் உள்ள சுமார் 30 ஆயிரம் ரேஷன் கடைகளில் செவ்வாய்க்கிழமை (பிப்ரவரி 1) முதல் இவை விற்பனை செய்யப்பட உள்ளது.

இதற்கு முன்னர் ரேஷன் கடைகளில் உளுத்தம், துவரம் பருப்பு ரூ. 40-க்கு விற்கப்பட்டது. மேலும் ரூ. 30-க்கு விற்பனையான பாமாயில் ரூ. 25-க்கு விற்பனை செய்யப்பட உள்ளது.

கடந்த வாரத்தில் உளுத்தம், துவரம் பருப்பின் விலை மூட்டைக்கு ரூ. 1,500 வரையிலும், கிலோவுக்கு ரூ. 10 வரையிலும் விலை உயர்ந்தன.

இதனால் வெளிச்சந்தையில் முதல் ரக துவரம் பருப்பு கிலோ ரூ. 63-ல் இருந்து ரூ. 73-க்கும், 2-ம் ரக துவரம் பருப்பு ரூ. 55-ல் இருந்து ரூ. 65-க்கும் விற்பனையாகிறது.

இதே போல் கிலோ ரூ. 63-க்கு விற்பனையான முதல் ரக உளுத்தம் பருப்பு ரூ. 68-க்கும், ரூ. 58-க்கு விற்பனையான 2-ம் ரக உளுத்தம் பருப்பு ரூ. 63-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிலோ ரூ. 60-க்கு விற்பனையான பாமாயில் இப்போது ரூ. 64-க்கு விற்பனையாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு எஸ்எம்எஸ் அனுப்பும் திட்டம் தொடக்கம்**

First Published : 31 Jan 2011 11:51:13 AM IST

கிருஷ்ணகிரி, ஜன.30: வேளாண் தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு எஸ்எம்எஸ் அனுப்பும் திட்டம் கிருஷ்ணகிரியில் சனிக்கிழமை தொடங்கப்பட்டது.

டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மையம் மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து, அரசுத் திட்டங்கள், வேளாண் தொழில் நுட்பங்கள், பயிர்களைத் தாக்கும் நோய்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், சந்தை நிலவரம் உள்ளிட்டவைகள் குறித்து விவசாயிகளுக்குத் தெரிவிக்க அவர்களது செல்போன்களுக்கு எஸ்எம்எஸ் அனுப்பும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன.

இத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வி.அருண் ராய் சனிக்கிழமை தொடங்கி வைத்தார். வேளாண் இணை இயக்குநர் க.ராஜன், மைய ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாச்சியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நியாய விலைக் கடைகளில் காய்கறி விற்பனை**

First Published : 31 Jan 2011 07:57:00 PM IST

தேனி, ஜன. 30: தேனி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில், நியாய விலைக் கடைகளில் மலிவு விலையில் காய்கறி விற்பனை ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கப்பட்டது.

தேனி அல்லிநகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் நடத்தப்படும், நியாய விலைக் கடையில் மலிவு விலை காய்கறி விற்பனையை கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் சி.குருமூர்த்தி தொடக்கி வைத்தார்.

அவர் கூறியதாவது: அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், கூட்டுறவுத் துறை சார்பில் நியாய விலைக் கடைகளில் மலிவு விலை காய்கறி விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.

தற்போது முதல் கட்டமாக தேனி, உத்தமபாளையம் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், தேனி, போடி, பெரியகுளம், ஆண்டிபட்டி, சக்கம்பட்டி, ஹைவேவிஸ், கம்பம், கூடலூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு பண்டகசாலைகள், அல்லிநகரம் தொடக்க கூட்டுறவு வேளாண்மைக் கடன் சங்கம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளில் மலிவு விலை காய்கறி விற்பனை தொடங்கியுள்ளது என்றார்.

**விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பிறகு இழப்பு தவிர்ப்புப் பயிற்சி**

First Published : 31 Jan 2011 07:07:35 PM IST

அரியலூர், ஜன. 30: மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மூலம் விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பிந்தைய இழப்பு தவிர்ப்புப் பயிற்சி முகாம் அரியலூரில் நடத்தப்பட்டது.

அரியலூர் ஒன்றியக் குழு கூட்ட அரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்தப் பயிற்சியை மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி தொடக்கிவைத்தார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்குக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு, தானியங்களின் பாதுகாப்பு குறித்து அவர்களுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, பயிற்சி முகாமின் நிறைவு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவன மண்டல மேலாளர் நாகேசுவரராவ் பேசியது:

அரியலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாயப் பொருள்களை சேமித்து, பின்னர் நல்ல விலைக்கு விற்கும் வகையில், சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்துக்கு 5 ஏக்கர் நிலம் வழங்க மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலம் கிடைத்தவுடன் ஓராண்டுகாலத்துக்குள் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்றார் அவர்.

பயிற்சியில் பங்கு பெற்ற விவசாயிகள் 30 விவசாயிகளுக்குப் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சென்னை மண்டல அலுவலக ஆய்வு அதிகாரி கருணாகரன், சீதாராமன் ஆகியோர் விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தனர். தஞ்சாவூர் கிடங்கு மேலாளர் ராமசுந்தரம் நன்றி கூறினார்.

தினமலர்

**விவசாயிகளுக்கு ரூ.19 கோடி நிவாரணம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,00:45 IST

சிவகங்கை : சமீபத்திய மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரண தொகை, கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும். கலெக்டர் சம்பத் கூறியதாவது: மாவட்டத்தில் தொடர் மழை, நோய் தாக்குதல் போன்ற காரணங்களால் நெல், மிளகாய், நிலக்கடலை, பயறு வகைகள், காய்கறி பயிர்கள் பாதிக்கப்பட்டன. அதற்கான நிவாரண தொகை 19 கோடி 22 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய், தொடக்க கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்டுள்ளது. நெல்லுக்கு எக்டேருக்கு 10 ஆயிரம், இறவை பயிர்களுக்கு 7,500; மானவாரி பயிர்களுக்கு 4,000 ரூபாய் வழங்கப்படும். தொடக்க கூட்டுறவு வங்கிகளில் கணக்கு இல்லாத விவசாயிகளுக்கு புது கணக்கு துவங்கப்பட்டு, தொகை வரவு வைக்கப்படும். நிவாரணம் கேட்டு விண்ணப்பித்த விவசாயிகள், கூட்டுறவு சங்கங்களை அணுகலாம், என்றார்.

**இரண்டு மாதம் தள்ளிப்போகும் தர்பூசணி "சீசன்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,00:42 IST

எஸ்.விவேக்/கோயம்பேடு கனமழையில் உற்பத்தி பாதிக்கப்பட்டதால், தமிழகத்தில் தர்பூசணி சீசன் இந்த ஆண்டு இரண்டு மாதம் தள்ளிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.
கோடை காலத்தில் விற்பனையில் களை கட்டும் தர்பூசணி சீசன், தமிழகத்தில் ஆண்டு தோறும் ஜனவரி மாதத்தில் துவங்கும். குறிப்பாக, பொங்கல் பண்டிகை முடிந்ததும் வெயிலின் உக்கிரம் ஆரம்பிக்கும் நேரத்தில், தர்பூசணி சீசன் துவங்கி விடும்.தமிழகத்திற்கு புதுச்சேரி, ஆந்திர மாநிலம் கடப்பா, சத்தியவேடு ஆகிய பகுதிகளில் இருந்து வரத்து இருக்கும். தமிழகத்தில் திண்டிவனம், மதுராந்தகம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தர்பூசணி உற்பத்தி அதிகளவில் இருக்கும்.சென்னை கோயம்பேடு மார்க்கெட்டை பொறுத்தவரை சீசனில் நாள் ஒன்றுக்கு 400 டன் அளவில் தர்பூசணி வரத்து இருக்கும். தர்பூசணி விற்பனையில் நாற்பதுக்கும் மேற்பட்ட பழக்கடை மொத்த வியாபாரிகள் ஈடுபடுவர்.கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு தமிழகம், ஆந்திராவில் பெய்த கனமழையால், தர்பூசணி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த ஆண்டு மார்க்கெட்களுக்கு அதன் வரத்து பெருமளவில் குறைந்தது.அதன் விலையும் கூடி, கிலோ 10 முதல் 12 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால், தற்போது நாள் ஒன்றுக்கு 100 டன் அளவிலான தர்பூசணி வரத்து உள்ளதால், சீசன் களை கட்டவில்லை. குறைந்தளவே வரத்து உள்ளதால் கோயம்பேடு மார்க்கெட்டில் இதற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.இது குறித்து கோயம்பேடு பழ மார்க்கெட் மொத்த வியாபாரி ராஜா முகம்மது கூறுகையில், ""தர்பூசணியை பொறுத்தவரை 60 நாட்களில் பயரிட்டு விளைச்சல் காணலாம். இம்முறை கனமழையால் செடிகள் அனைத்தும் அழுகி விட்டன. ஜனவரி மாத ஆரம்பத்தில் உற்பத்தியாளர்கள் பயிரிட்டு உள்ளதால், இந்த முறை இரண்டு மாதத்திற்கு பின்பே சீசன் களைகட்டும், '' என்றார்.

**கேந்திப்பூ விலை வீழ்ச்சி :விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,01:01 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில், கேந்தி பூவின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பிள்ளையார்நத்தம், பூவாணி, தொட்டியபட்டி, மல்லி, உட்பட பல பகுதி விவசாயிகள் கேந்திப்பூ சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். பிள்ளையார்நத்தம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்திருப்பதால் ஆழ்துளை கிணறுகளில் இருக்கும் குறைவான தண்ணீரை கொண்டு வாரத்திற்கு ஒரு முறை நீர்பாய்ச்சி, செடிகளை காப்பாற்றி வந்தனர். கடந்த மாதம் வரை கிலோ கேந்தி பூ 50 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த 15 நாள்களாக கிலோ 10 ரூபாய்க்கும் குறைவாக விற்பனையாகிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இது

குறித்து விவசாயி கோவிந்தன் கூறுகையில், ""கடந்த மாதம் வரை சபரி மலை சீசன் இருந்ததால் நல்ல விலை கிடைத்தது. இந்தமாதம் மிக குறைவான விலையே கிடைத்து வருகிறது. மாசி மாத பிறப்பிற்கு பிறகு தான் விலை உயர வாய்ப்புள்ளது," என்றார்.

**புதியம்புத்தூரில் காய்கறி விலை சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,00:59 IST

புதியம்புத்தூர் : புதியம்புத்தூரில் காய்கறி விலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது பொதுமக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பொங்கலுக்கு முன்பு கிலோ 70க்கு விற்ற பெரிய பல்லாரி 20க்கும், 50க்கு விற்ற உள்ளி 27க்கும், 2ம் தர உள்ளி 25க்கும் ஏலம் போனது. 34க்கு விற்ற தக்காளி 12க்கும், 26க்கு விற்ற சிறுகிழங்கு 9க்கும், கத்தரிக்காய் 8க்கும் கமிஷன் ஏல மண்டியில் இந்த விலைக்கு காய்கறி ஏலம் போனது. இதை வாங்கி சில்லறை விற்பனை செய்யும் வியாபாரிகள் அதிக லாபத்திற்கு விற்று வருகின்றனர். வாழைத்தார் வரத்து கம்மியாக இருந்ததால் விலை சற்று கூடுதலாகவே இருந்தது. சின்ன இலைகட்டு (200 இலை)150க்கும், பெரிய இலைகட்டு(200 இலை)300க்கும் ஏலம் போனது. காய்கறிகளில் வெண்டைக்காய் மட்டும் விலை குறையாமல் 25க்கு விற்பனையானது. நார்த்தை 5க்கும், எலுமிச்சை 8க்கும் விற்பனையானது. பொங்கலுக்கு முன்பு 30க்கு விற்ற மல்லிசெடி 8க்கும், கருவேப்பிலை 10க்கும் ஏலம் போனது. இந்த விலை குறைவினால் பொதுமக்களும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த முடியாமல் திணறும் அரசு மீது தற்சமயம் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருந்த கோபம் தணியும் என்ற நினைப்பில் ஆளும் கட்சியினரும் நிம்மதி பெருமூச்சுடன் உள்ளனர்.

**உளுந்து பெரு விளக்கப் பண்ணையில் புகையிலை வளர்ச்சி ஆணையர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,00:27 IST

உளுந்தூர்பேட்டை : திருநாவலூரில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பயிரிடப்பட்ட உளுந்து பெரு விளக்கப் பண்ணையை மாநில புகையிலை வளர்ச்சி ஆணையர் நேரில் ஆய்வு செய்தார். திருநாவலூர் பகுதியில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் துரிதப்படுத்தப்பட்ட பயறு பெருக்க திட்டத்தில் 2, 500 ஏக்கர் பரப்பளவில் உளுந்து பெரு விளக்கப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,094 விவசாயிகளுக்கு இலவச ரசாயன உரங்கள், தாவரப்பூச்சி விரட்டி, ரசாயன பூச்சி கொல்லி, இனக்கவர்ச்சி பொறிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின் செயல்பாடு மற்றும் பயன்பாடு குறித்து மாநில புகையிலை வளர்ச்சி

ஆணையர் குமார், தொழில்நுட்ப அலுவலர் நேதாஜி நேரில் ஆய்வு செய்து, விவசாயிகளிடம் திட்ட பயன்பாடு குறித்து கேட்டறிந்தனர். திருநாவலூர், உளுந்தூர்பேட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை பார்வையிட்டார். வேளாண் உதவி இயக்குனர்கள் ரவீந்திரன், தெய்வநிதி, வேளாண் அலுவலர் விஜயலட்சுமி, உதவி அலுவலர்கள் ஞானவேல், செல்வகுமார் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,00:24 IST

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் அடுத்த மேல்தனியாலம்பட்டு கிராமத்தில் வேளாண்துறை சார்பில் விதைக் கிராம திட்டத்தின் கீழ் நூறு விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் ரத்தினசபாபதி தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் தேவநாதன் முன்னிலை வகித்தார். துணை வேளாண் அலுவலர் பிரசன்னராஜ் வரவேற்றார். திண்டிவனம் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் நடராஜன், விதை சான்று அலுவலர் சண்முகம் பயிற்சியளித்தனர். உதவி வேளாண் அலுவலர் பாரி நன்றி கூறினார்.

**மஞ்சள் மார்க்கெட்டில் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2011,01:08 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் மஞ்சள் விலை வீழ்ச்சியடைகிறது. நேற்றைய மார்க்கெட்டில் குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வரை குறைந்தது. நடப்பாண்டு துவக்கத்தில் புதிய மஞ்சள் வரத்தானது. அதன் பின், மஞ்சள் விலை படிப்படியாக குறையத் துவங்கியது. ஜனவரி துவக்கத்தில் விரலி குவிண்டால் 16 ஆயிரத்து 100 ரூபாய், கிழங்கு 16 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. ஜனவரி 13ம் தேதி விரலி 15 ஆயிரத்து 180 ரூபாய், கிழங்கு 14 ஆயிரத்து 100 ரூபாயாக குறைந்தது. இவ்விலை மேலும் படிப்படியாக குறைந்து ஜனவரி 28ம் தேதி விரலி 14 ஆயிரத்து 330 ரூபாய், கிழங்கு 13 ஆயிரத்து 279 ரூபாய்க்கு விற்பனையானது.

சனி, ஞாயிறு விடுமுறைக்கு பின் நேற்று மீண்டும் மஞ்சள் மார்க்கெட் துவங்கியது. மஞ்சள் விலை நேற்று மேலும் சரிவடைந்தது. நேற்றைய நிலவரப்படி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் விரலி 13 ஆயிரத்து 249 ரூபாய், கிழங்கு 13 ஆயிரத்து 215 ரூபாய்க்கு விற்னையானது. வெளி மார்க்கெட்டில் விரலி 12 ஆயிரத்து 579 ரூபாய், கிழங்கு 12 ஆயிரத்து 296 ரூபாய்க்கு விற்பனையானது. ஈரோடு சொசைட்டியில் விரலி 13 ஆயிரத்து 339 ரூபாய், கிழங்கு 13 ஆயிரத்து 45 ரூபாய்க்கும், கோபி சொசைட்டில் விரலி 12 ஆயிரத்து 560 ரூபாய், கிழங்கு 12 ஆயிரத்து 115

ரூபாய்க்கு விற்பனையானது. நேற்றைய மார்க்கெட்டில் குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வரை மஞ்சள் வீழ்ச்சி அடைந்துள்ளது. சென்ற ஒரு மாதத்தில் குவிண்டாலுக்கு 3,550 ரூபாய் வீழ்ச்சி அடைந்துள்ளது. மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**இடுபொருட்கள் பெற விவசாயிகளுக்கு அரசு அடையாள அட்டை அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,23:45 IST

நெல்லிக்குப்பம் : தமிழக அரசு மூலம் வழங்கப்படும் இடுபொருட்களை எளிதாக பெற விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு தமிழக அரசு "ராஜராஜன் 1000' நெல் நடவு, பயிறு வகை பயிர்களுக்கு இலவசம் மற்றும் மானிய விலையில் இடுபொருட்களும், சொட்டு நீர் உட்பட பல திட்டங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இவற்றை பெற ஒவ்வொரு முறையும் பல்வேறு விவரங்களை விவசாயிகள் வழங்க வேண்டியுள்ளது. இதற்காக செலவு அதிகமாவதுடன், நேரமும் விரயமாகிறது. இதனைத் தவிர்க்க புதிய திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு விவசாயிக்கும் அடையாள அட்டை வழங்கி அதில் விவசாயி பெயர், வங்கி கணக்கு எண், நிலத்தின் சர்வே எண் போன்ற விவரங்களை கம்ப்யூட்டரில் பதிவு செய்து விட்டால் போதும், அதன் பிறகு விவசாயிகள் தங்கள் அடையாள அட்டையை காண்பித்து விவசாய டெப்போவில் இடுபொருட்களை பெற்றுக் கொள்ளலாம். இதற்காக ஒவ்வொரு முறையும் அதிகாரிகளை பார்க்கத் தேவையில்லை. எளிதாக இடுபொருட்களை பெறமுடியும். மானிய தொகைகள் மற்றும் நிவாரண நிதிகளை இனி விவசாயிகள் வங்கிகளில் நேரடியாக பணத்தை பெற்றுக் கொள்ள முடியும். அண்ணாகிராமம் வட்டாரத்தில் 5,600 விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் பணியை உதவி இயக்குனர் சம்பத்குமார் செய்து வருகிறார்.

**கறவை மாடுகளுக்கு கடன் வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,23:49 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் அடுத்த கார்மாங்குடி தொடக்க வேளாண்மை வங்கியில் தமிழ்நாடு அரசின் பிற்பட்டோர் நலத்துறையின் சலுகை வட்டி திட்டத்தின் கீழ் கறவை மாடு கடன் வழங்கும் விழா நடந்தது. அறங்காவலர் குழுத் தலைவர் பாஸ்கர் தலைமை தாங்கினார். கூட்டுறவு கடன் சங்க செயலர் தட்சணாமூர்த்தி முன்னிலை வகித்தார். கூட்டுறவு சங்க தனி அலுவலர் சாய்ராமன் வரவேற்றார். ஊராட்சி தலைவர் ஜெயலட்சமி 14 பயனாளிகளுக்கு கறவை மாடுகளை

வழங்கினார். உழவர் மன்ற தலைவர் வெங்கடேசன், உறுப்பினர்கள் நாகராஜ், தினேஷ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கோழி வளர்ப்போர் சங்கக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,23:43 IST

ஓசூர்: சூளகிரியில் பண்ணைக்கோழி வளர்ப்போர் சங்க ஆலோசனை கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் சிவராஜ் தலைமை வகித்தார். ஒன்றிய தலைவர் மாணிக்கம், வெங்கடசாமி, வீராசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணை தலைவர் ராமகவுண்டர் பேசினார். "பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளுக்கு தேவையான தீவனம் மற்றும் மருந்துகளை கோழி நிறுவனங்கள் வழங்குவதில்லை. கோழி வளர்ப்பு பணத்தையும் உடனுக்குடன் வழங்குவதில்லை. இது குறித்து மாவட்ட நிர்வாகத்திடம் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, தீர்மானம் நிறைவேற்றினர்.

**விலை உயரும் வரை மக்காச்சோளத்தை சேமிக்கலாம்:வேளாண் துறை அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,23:13 IST

கோவை: "ஒருங்கிணைந்த முறைகளை பின்பற்றுவதால், சேமித்த மக்காச்சோள தானியங்களை, விலை உயரும்போது, தரமான தானியமாக விற்பனை செய்து லாபம் ஈட்டலாம்' என, வேளாண்துறை அறிவுறுத்தி உள்ளது. ஈரோடு வேளாண் துணை இயக்குனர்(வணிகம்) பரமசிவம், தாராபுரம் வேளாண் அலுவலர் பொன்னுசாமி (வணிகம்) கூட்டறிக்கை:பரம்பிகுளம்-ஆழியாறு மற்றும் கிணற்றுப்பாசனம் மூலம் பயிரிடப்பட்ட மக்காச்சோளம் அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது. அறுவடை செய்யும் தட்டுக்கள் பழுப்பு நிறமாக மாறி, கதிர்களின் உறை நன்கு காய்ந்த பின் கதிர்களை தனியே பிரித்து எடுக்க வேண்டும். அவற்றை ஒரு வாரம் குவியலாக வைத்த பின் கதிரடிக்கும் இயந்திரம் கொண்டு கதிரடித்தோ அல்லது அறுவடை இயந்திரம் கொண்டு அறுவடை செய்யவேண்டும். நல்ல விலை கிடைத்தால் தற்போதே விற்பனை செய்யலாம். அறுவடைக்காலம் என்பதால், கொள்முதல் விலை குறைவாக இருந்தால், இருப்பு வைத்து, நல்ல விலை கிடைக்கும் போது விற்பனை செய்யலாம். இருப்பு வைக்கும்போது சில முறைகளைப் பின்பற்றவேண்டும். தானியங்களை வெயிலில், ஈரப்பதம் 12 சதவீதத்துக்கு மிகாமல் நன்கு காயவைத்து அவற்றிலிருந்து உடைந்த, கெட்டுப்போன தானியங்களை அகற்றி சேமித்து வைக்கலாம். சேமித்த தானியங்களை நன்கு காயவைத்து தூற்றி சுத்தமாக சேமிப்பதன் மூலம் பூச்சி, பூஞ்சானத்தின் தாக்குதலை பெருமளவு தடுக்க முடியும். கோணிப்பைகள் பழையதாக

இருந்தால், அவற்றை 0.2 சதம் மாலத்தியான் கரைசல் தெளித்து காயவைத்து பின் சேமிக்க பயன்படுத்தவேண்டும். தரையிலுள்ள ஈரப்பதம் மூட்டைகளை தாக்காதவாறு பாலித்தீன் விரிப்பு அல்லது மரப்பலகைகளை பயன்படுத்தி மூட்டைகள் அடுக்கவேண்டும். அடுக்கும் மூட்டைகளை பக்கவாட்டு சுவரிலிருந்து மூன்று அடி இடைவெளி விட்டு அடுக்கவேண்டும். ஒரு வரிசையில் 10 மூட்டைக்கு மேல் ஒன்றன்மீது ஒன்று அடுக்கக் கூடாது. அடுக்கிய மூட்டைகளை மூன்று மாதத்துக்கு ஒரு முறை மேலும், கீழுமாக மாற்றி அடுக்கவேண்டும். தானிய மாதிரிகளை அவ்வப்போது எடுத்து ஆய்வு செய்ய வேண்டும். பூச்சிகள், வண்டுகள் தாக்குதல் இருந்தால் ஒரு டன் தானியத்துக்கு மூன்று கிராம் எடையுள்ள மூன்று அலுமினியம் பாஸ்பைடு மாத்திரைகளை மூட்டைகளின் மேல்புறம் வைக்கவேண்டும். ஐந்து முதல் ஏழு நாட்கள் காற்று புகாது தார்பாய் மூலம் மூடி, பின் திறந்து சில மணி நேரம் நல்ல காற்றோட்ட வசதி செய்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### லாபமற்ற தொழிலாகிறது விவசாயம்:வேளாண் துறை செயலர் கவலை

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,23:07 IST

கோவை: ""விவசாயம் லாபமற்ற தொழிலாக மாறிவருகிறது. பெரும்பாலான விவசாயிகள், விவசாயத்தை விட்டு வெளியேறிவிட்டனர்,'' என, மத்திய வேளாண் துறை முதன்மை செயலர் ராம மோகன் ராவ் பேசினார். தமிழ்நாடு வேளாண் பல்கலையில் மூன்று நாட்கள் தொடர்ந்து நடக்கும், வேளாண் உயிரி தொழில் நுட்ப மாநாடு நேற்று துவங்கியது. மத்திய வேளாண் துறை முதன்மை செயலர் ராம மோகன் ராவ் பேசியதாவது: நம்நாட்டில் பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்து வருகிறது. சாகுபடி வளங்களும் வேளாண் உற்பத்தியும் குறைந்துள்ளது. இதை சரிப்படுத்த வேளாண் தொழில்நுட் பம் அவசியம். உற்பத்தியை பல மடங்கு பெருக்குவதற்கும், உயிரியியல் தொழில்நுட்ப முறைகளை பெருக்குவது அவசியம். தமிழகம் நீர் பற்றாக்குறை உடைய மாநிலம். ஆறுகளின் வாயிலாக கிடைக்கும் நீர் வரத்து மிகக்குறைவு. தமிழகத்தில் நிலத்தடி நீரை 90 சதவீதத்துக்கும் அதிகமாக பயன்படுத்தி விட்டோம். நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. நிலப்பரப்பில் 50 சதவீத அளவுக்கு மட்டுமே பாசன வசதியுடன் உள்ளது. 50 சதவீத பகுதி பாசன வசதி இல்லாமல் உள்ளது. இத்தருணத்தில் நாம் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். அதற்குரிய தொழில்நுட்பத்தை பயன் படுத்திக்கொள்ள வேண்டும். வறட்சி மற்றும் வெள்ளம் போன்றவற்றை தாங்கி வளரும் புதிய வகையிலான பயிர் ரகங்கள் நமக்கு தேவைப்படுகிறது. புதிய ரகங்களை உருவாக்குவது, தரமான விதைகளை உயிரி தொழில் நுட்பத்தை பின்பற்றி உற்பத்தி செய்ய வேண்டும். பாரம்பரிய பயிர் ரகங்கள் வறட்சி, பூச்சிநோய் தொல்லைகளை தாங்கி வளர் பவை. அவை மறைந்து வருகின்றன. தற்போது ஒரு சில

ரகங்கள் கூட புழக்கத்தில் இல்லை. பாரம்பரிய பயிர் களை, நல்ல குணாதிசியங்களை கொண்ட உயிரி தொழில்நுட்பம் மூலம் நாம் உற்பத்தி செய்யலாம். அதன் மூலம் உயர்விளைச்சளை கொடுக்கும் வீரிய ஒட்டு ரகங்களை உருவாக்க வேண்டும். விவசாயம் லாபமற்ற தொழிலாக மாறிவருகிறது. பெரும்பாலான விவசாயிகள், விவசாயத்தை விட்டு வெளியேறிவிட்டனர். அதனால் நிறைய விவசாய நிலம் தரிசாகவே உள்ளது. 40 வயதுடைய இளம் விவசாயிகளை காண முடிவதில்லை. பெரும்பாலான இளைஞர்கள் விவசாய தொழில் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் விவசாயம் லாபகரமான தொழிலாக மாறவேண்டும். உயிரியியல் தொழில்நுட்பம் உதவ வேண்டும்.விவசாயத்தில் தொழில்முனைவோரை உருவாக்க வேண்டும். அதற்கு உயிரி தொழில் நுட்பம் பயனுள்ளதாக இருக்கும். இவ்வாறு, மத்திய வேளாண் துறை முதன்மை செயலர் ராம மோகன் ராவ் பேசினார். இம்மாநாடு தொடர்ந்து இன்றும், நாளையும் நடக்கிறது. இதில் வேளாண் பல்கலை துணை வேந்தர் முருகேசபூபதி, அமெரிக்காவிலுள்ள எம்.ஐ.பி.ஆர்.டி., அமைப்பு தலைவர் ராஜன்நடராஜன், ஐதராபாத்திலுள்ள சர்வதேச மிதவெப்ப பகுதிக்கான பயிர் ஆராய்ச்சி நிறுவன தலைமை செயல் அதிகாரி கிரிசர்மா உள்ளிட்ட ஆறு பேருக்கு வேளாண் வளர்ச்சிப்பணியில் தொலைநோக்குப்பார்வையில் சிறந்த தலைமையாக செயல்பட்டதற்காக எம்.ஐ.பி. ஆர்.டி., விருதுகள் வழங்கப்பட்டது.

**பசுமை குடிலில் வளரும் மலர் செடிகளுக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,23:37 IST

குன்னூர்: "பசுமை குடிலுக்குள் வளர்க்கப்படும் கொய்மலர் செடிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படவுள்ளது,' என விவசாயிகளுக்கான பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது. குன்னூர் தோட்டக்கலை துறை சார்பில், தேசிய தோட்டக்கலை ஆணையத்தின் சார்பில் விவசாயிகளுக்கான ஐந்து நாள் பயிற்சி முகாம் குன்னூர் விவேக் டூரிஸ்ட் அரங்கில் நேற்று துவங்கியது. தோட்டக்கலை துறை இணை இயக்குனர் ஹால்துரை தலைமை வகித்து பேசுகையில், ""தேசிய தோட்டக்கலை ஆணையம் நீலகிரி மாவட்டத்தில் விவசாய மேம்பாட்டு பணிக்கு 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது; இதில் கொய்மலர் சாகுபடிக்கான பசுமைக் குடில் அமைக்க 50 சதவீத மானியம் வழங்கப்படவுள்ளது. அதாவது, ஒரு சதுர அடிக்கு 650 ரூபாய் செலவு பிடிக்கும் நிலையில் 325 ரூபாய் மானியமாக வழங்கப்படவுள்ளது. வெள்ளை பூண்டு சாகுபடி, காய்கறி விவசாயம், தேயிலை விவசாயம் குறித்த பயிற்சியும், பழங்களை கொண்டு ஜாம், ஜெல்லி, ஊறுகாய் தயாரிப்பது உட்பட பல பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன," என்றார். குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மணி பேசியதாவது; கடந்த காலங்களில் பசுமைக் குடில் அமைப்பதற்காக மட்டும் வழங்கப்பட்ட மானியம் இந்தாண்டு, முதன்முறையாக

பசுமை குடிலுக்குள் சாகுபடி செய்யப்படும் லில்லியம், கார்னேஷன் உட்பட மலர் செடிகளுக்கும், 50 சதவீத மானியம் வழங்கப்படவுள்ளது. மாவட்டத்தில் உள்ள தோட்டங்களில் பெரும்பாலானோர் கையாளும் தெளிப்பு நீர் பாசன முறைக்கான உபகரணங்கள் வாங்க, ஒரு எக்டருக்கு 9,750 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. பீன்ஸ், பட்டாணி, காரட், முட்டை கோஸ் உட்பட காய்கறி விதைகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இயற்கை மண்புழு உரம் தயாரிக்க 30 ஆயிரம் ரூபாய் வரையும், கைத் தெளிப்பான், ஆயில் இயந்திரம், பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரம், முள், மண்வெட்டி உட்பட விவசாய தளவாடப் பொருட்கள் 25 சதவீத மானிய விலையிலும் வழங்கப்படுகின்றன. மானிய உதவி உட்பட விவசாயம் சார்ந்த விளக்கங்களை "2231718' என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு, மணி பேசினார்.

**காணை நோய் தாக்கிய பகுதிகளில் இருந்து புதிய கால்நடைகளை வாங்க வேண்டாம் : கால்நடை டாக்டர்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,20:50 IST

மதுரை : ""காணை நோய் தாக்கிய பகுதிகளில் இருந்து, புதிதாக கால்நடைகளை வாங்கக் கூடாது,'' என, திருப்பரங்குன்றம் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய டாக்டர்கள் உமாராணி, முருகானந்தன் தெரிவித்தனர்.
அவர்கள் கூறியதாவது : காணை நோய் நச்சுயிரியால் உண்டாகும் கொடிய தொற்று நோய். இது நாட்டு மாடுகளை விட கலப்பின மாடுகளை அதிகம் தாக்குகின்றன. பாதிக்கப்பட்ட கால்நடைகளை தனியே பிரித்து வைக்க வேண்டும். கொட்டகையை ஒரு லிட்டர் தண்ணீரில் 40 கிராம் சலவை சோடாவை கரைத்து கழுவினால் நோய்க்கிருமிகள் அழிந்துவிடும்.

வெந்நீரில் சிறிது உப்பு கலந்தோ அல்லது ஒரு சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கலந்தோ காலில் உள்ள புண்களை கழுவவேண்டும். லோரெக்சான் ஆன்டிசெப்டிக் களிம்பு அல்லது போரிக் பவுடரை வேப்ப எண்ணெயில் கலந்து தடவலாம். நாள்பட்ட புண்ணாக இருந்தால் கற்பூரத்தை பொடி செய்து தடவ வேண்டும். அல்லது டர்பன்டைன் எண்ணெயை ஊற்றலாம். அதன்பின் ஆன்டிசெப்டிக் மருந்திடலாம்.

வாயில் புண் இருந்தால் கிளிசரின் அல்லது போரிக் ஆசிட் பவுடரை தேங்காய் எண்ணெயில் குழைத்து மூன்று முதல் நான்கு முறை தடவ வேண்டும். இவற்றை ஓரிடத்திலிருந்து இன்னொரு

இடத்திற்கு ஓட்டிச் செல்லக்கூடாது. குளம், ஏரி போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லக்கூடாது. கன்றுகளுக்கு பாலூட்ட விடக்கூடாது. அனைத்து கால்நடைகளுக்கும் ஒரே சமயத்தில் தடுப்பூசி போடவேண்டும். காணைநோய் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து கால்நடைகளை வாங்கக்கூடாது. புதிதாக வாங்கிய கால்நடைகளை 21 நாட்களுக்கு தனியே பராமரிக்க வேண்டும், என்றனர்

**அதிகாரிகள் அலட்சியத்தால் கொள்முதல் செய்யப்படாத நெல் : பரிதாபத்தில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,20:49 IST

மேலூர் : கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு ஒரு வாரமாகியும் நெல்லை கொள்முதல் செய்யாமல், கமிஷன் பிரச்சனையால் குவிந்து கிடக்கிறது நெல் மூடைகள். இதனால் நெல்லுக்கு பாதுகாப்பாக இரவு பகலாக காத்து கிடக்கும் பரிதாப நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

மேலூர் அருகே கொட்டகுடியில் அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையம் கடந்த வாரம் அமைக்கப்பட்டது. கொட்டகுடியை சுற்றி உள்ள அரசப்பன்பட்டி, பதினெட்டாங்குடி, ஆண்டிபட்டி, ஆட்டுக்குளம், வண்ணாம்பாறைப்பட்டியை சேர்ந்த விவசாயிகள் தங்கள் நெல்லுடன் அங்கு குவிந்தனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு விவசாயிகளிடம் எந்த தொகையும் வசூலிக்க கூடாது. மூடையை தைத்து, ஏற்றி இறக்க, அரசே லோடுமேன்களுக்கு பணம் தந்து விடுகிறது. ஆனாலும் ஒவ்வொரு கொள்முதல் நிலையத்திலும் எழுதப்படாத சட்டமாக லோடுமேன்கள், அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு பணம் தந்தே ஆக வேண்டும்.

தொடர்ந்து லஞ்சம் கொடுத்து பழகிவிட்ட விவசாயிகளும் இதை அவ்வளவாக பெரிது படுத்துவது இல்லை. கொட்டகுடி கொள்முதல் நிலையத்தில் மூடை ஒன்றுக்கு லோடுமேன்களுக்கு ரூ.10, அதிகாரிகளுக்கு ரூ. 5, அரசியல்வாதிகளை கொண்ட கமிட்டிக்கு ரூ. 5 என முடிவு செய்யப்பட்டது. இவற்றை வழங்க விவசாயிகள் ஒத்துக் கொள்ள, முதல் நாள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

**கொள்முதல் நிறுத்தம்:** கமிட்டியில் உள்ளவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தாங்கள் பெறும் தொகை குறைவாக தெரிய, மேலும் மூடைக்கு ரூ. 5 அதிகரித்து தர வேண்டும் என விவசாயிகளை நிர்பந்தித்துள்ளனர். இதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கவே, அத்துடன் கொள்முதல் நிறுத்தப்பட்டது. கடந்த ஐந்து நாட்களாக அங்கு நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. இது

குறித்து கலெக்டரிடம் புகார் செய்யப்பட, மேலூர் தாசில்தார் வந்து விசாரணை செய்து திங்கட் கிழமை முதல் கொள்முதல் செய்யப்படும் என கூறி சென்றார்.

ஆனால் நேற்று மதியம் 3 மணி வரை எந்த அதிகாரியும் அங்கு வரவில்லை. கொள்முதல் நிலையத்தில் தங்கள் நெல்லுடன் விவசாயிகள் இரவு பகலாக காவலுக்கு இருக்க வேண்டிய நிலை. திடீரென மழை ஏதேனும் பெய்தால் அனைத்து நெல் மூடைகளின் நிலையும் மோசமாகிவிடும். எடை போடாமல் அடியில் வைத்துள்ள சில மூடைகளில் உள்ள ஒரு சில நெல் முளைக்க ஆரம்பித்துள்ளது.

ஏறிவிட்ட உர விலை, ஆட்கள் பற்றாக்குறை, கடுமையான உழைப்பு என உழன்று நெல்லை உற்பத்தி செய்த பிறகும், விவசாயிகள் அதை விற்பனை செய்ய படாதபாடு நிலையில் உள்ளனர். பரிதாபத்திற்குரிய இந்த விவசாயிகளை காப்பாற்ற எந்த அதிகாரிகளுக்கும் மனதில்லையா ?

**நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் தேர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 31,2011,20:43 IST

செக்கானூரணி : நீர்வள, நிலவளத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எக்டேருக்கு 15ஆயிரம் ரூபாய் மதிப்பில் இடு பொருட்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

தோட்டக்கலைத்துறை சார்பில் திருமங்கலம் வட்டாரத்தில் தெற்காறு மற்றும் மேல் குண்டாறு உபவடிநிலப் பகுதி கண்மாய் ஆயக்கட்டுப்பரப்பு கிராமங்களில் நீர்வள, நிலவளத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தெக்காறு உபவடி நிலப்பகுதியின் கீழ் ஆ.கொக்குளம், தும்பக்குளம், திடியன், உரப்பனூர், ஆலங்குளம், விவசாயிகளும், மேல் குண்டாறு உபவடிநிலப்பகுதியின் கீழ் புல்லமுத்தூர் சவுடார்பட்டி, பொக்கம்பட்டி, தங்களாச்சேரி, அலப்பலச்சேரி விவசாயிகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வீரிய ஒட்டு ரக காய்கறி பயிர் விதைகள், உயிர் உரங்கள், வேப்ப எண்ணெய், நுண் உரங்கள், ரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் உட்பட ஒரு எக்டேருக்கு ரூ.15ஆயிரம் மதிப்பிலான இடு பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

இதுகுறித்து திருமங்கலம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜவஹரிபாய் அறிவிப்பு: திருமங்கலம் வட்டாரத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள விவசாயிகள்அந்தந்த பகுதி களப்பணியாளர்களை அணுகி பயிர் சாகுபடி தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ளலாம். இதன் மூலம் அதிக பரப்பளவில்

வீரிய ஒட்டு ரக காய்கறிகளை சாகுபடி செய்து, கூடுதல் மகசூல் மற்றும் லாபம் பெறலாம். கூடுதல் விபரங்களுக்கு தோட்டக்கலை அலுவலர் மணிவேலுவை தொடர்பு கொள்ளவும், என தெரிவித்துள்ளார்.

## *300 ஏக்கர் பரப்பளவில் மாமல்லபுரம் அருகே கடல்சார் உயிரி தொழில்நுட்ப பூங்கா துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு*




சி.ஐ.ஐ. ஆய்வறிக்கையை துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டபோது எடுத்த படம். அருகில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், சி.ஐ.ஐ. தமிழ்நாடு தலைவர் ஆர்.நந்தினி, அமைப்பாளர் பி.எம்.முரளி ஆகியோர் உள்ளனர்.

*சென்னை, பிப்.1–*

*சென்னையை அடுத்த மாமல்லபுரம் அருகே 300 ஏக்கர் பரப்பளவில் கடல்சார் உயிரி தொழில்நுட்ப பூங்காவும், மூலிகை தாவர உயிரி தொழில்நுட்ப பூங்காவும் அமைக்கப்படும் என்று துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.*

*சி.ஐ.ஐ. ஆலோசனை கூட்டம்*

*இந்திய தொழில்கூட்டமைப்பு (சி.ஐ.ஐ.) சார்பில் "தமிழகத்தில் 2020–ம் ஆண்டில் உயிரி தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளின் வளர்ச்சிக்கான திட்டங்கள்'' என்ற தலைப்பிலான வட்டமேஜை ஆலோசனை கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது. இதில் துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு சி.ஐ.ஐ. ஆய்வறிக்கையை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*இந்தியாவில் அனைத்து துறைகளிலும் தமிழகத்தை முன்னணியில் கொண்டுவர*

வேண்டும் என்பது நம் அனைவரின் விருப்பம். அந்த இலக்கை அடையும் வண்ணம் சி.ஐ.ஐ. அமைப்பு தமிழக அரசுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. உயிரி தொழில்நுட்பத்துறை (பயோ–டெக்னாலஜி) மேம்படுத்தும் வகையில் 2000–ம் ஆண்டில் தனிக்கொள்கையை அறிவித்த முதல் மாநிலம் தமிழகம்தான்.

உயிரி தகவல் தொழில்நுட்பம்

நம்மைப் பின்பற்றி பல மாநிலங்கள் உயிரி தொழில்நுட்பத்துறைக்கென தனிக்கொள்கையை அறிவித்து இதர மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் அதிக முதலீடுகளை பெற்று வருகின்றன. ஒட்டுமொத்த மனிதகுலமும் பயன்பெறும் வகையில் உயிரி தொழில்நுட்பத்துறையில் ஏராளமான வளங்கள் இருக்கின்றன.

வறுமை, பூமி வெப்பமடைதல், உணவுப்பொருள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை, நோய்கள் உள்பட உலகம் சந்தித்து வரும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு இந்த துறை மூலமாக தீர்வு காண முடியும். மேலும், ஏராளமான வேலைவாய்ப்புகளையும் உயிரி தொழில்நுட்பத்துறையால் உருவாக்க முடியும். நூறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் தொகையையும், மிகப்பெரிய சந்தையையும் கொண்டுள்ள இந்தியாவுக்கு இதர நாடுகளை விட இந்த துறையில் அதிக பலன்களை பெறமுடியும்.

முதல் மாநிலம் தமிழகம்

தமிழகத்தில் உயிரி தொழில்நுட்ப ஆதாரங்கள் நிறைய உள்ளன. அறிவாற்றலும், தொழில்திறமையும் பெற்ற மனிதவளம் இங்கு அதிகமாக இருக்கிறது. இதுபோன்ற காரணங்களினால் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிக்கு தமிழகம் சிறந்த இடமாக கருதப்படுகிறது. முதல்–அமைச்சர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு, உயிரி தொழில்நுட்பத்துறைக்கென தனிக்கொள்கையை உருவாக்கி இந்துறையின் மேம்பாட்டுக்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நாட்டிலேயே முதல்முதலாக பெண்களுக்கென தனி உயிரி தொழில்நுட்ப பூங்கா சென்னையை அடுத்த சிறுசேரியில் 2000–ம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன்பின்னர், அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழக தொழில்நுட்ப உதவியுடன் சென்னை தரணியில் ரூ.54 கோடியே 76 லட்சம் செலவில் முதலாவது டைசல் உயிரி தொழில்நுட்ப பூங்கா ஏற்படுத்தப்பட்டது. சிறப்பாக செயல்பட்டு வரும் இந்த பூங்காவில் அனைத்து வளாகங்களும் முழுவதுமாக நிரம்பிவிட்டன.

2 புதிய தொழில்நுட்ப பூங்காக்கள்

இதையடுத்து, அங்கு ரூ.150 கோடி செலவில் 2–வது டைசல் உயிரி தொழில்நுட்ப

பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பணி இந்த ஆண்டில் முடிவடையும். இதன்மூலமாக, 1,500 விஞ்ஞானிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும் 2–வது பூங்காவில், ரூ.19 கோடியே 30 லட்சம் செலவில் சிறப்பு உயிரி தொழில்நுட்ப மையம் அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

மேலும், சென்னையை அடுத்த மாமல்லபுரம் அருகே 300 ஏக்கர் பரப்பளவில் கடல்சார் உயிரி தொழில்நுட்ப பூங்காவும், மூலிகை தாவர உயிரி தொழில்நுட்ப பூங்காவும் விரைவில் அமைக்கப்படும். உயிரி தொழில்நுட்பத்துறை மேம்பாட்டுக்கென அரசு எடுத்து வரும் சிறப்பு முயற்சிகள் மூலமாக தமிழகத்தில் இந்த துறை மிக வேகமாக வளரும்.

விரைவில் புதிய கொள்கை

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் இல்லாமை, உயிரி தொழில்நுட்ப பொருட்களுக்கு ஒழுங்குமுறை அனுமதி பெறுவதில் ஏற்படும் காலதாமதம் போன்றவை உயிரி தொழில்நுட்ப துறை சந்திக்கும் மிகப்பெரிய பிரச்சினைகள் ஆகும். இதை கருத்தில் கொண்டு, விரைவில் புதிய உயிரி தொழில்நுட்ப கொள்கை வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. அந்த புதிய கொள்கை, இந்த துறையின் வளர்ச்சிக்கு உதவிகரமாக அமையும்.

இவ்வாறு துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

முன்னதாக, சி.ஐ.ஐ. தமிழ்நாடு மாநில கவுன்சில் தலைவர் ஆர்.நந்தினி, சி.ஐ.ஐ. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப பணிக்குழுவின் தலைவர் பி.எம்.முரளி ஆகியோர் அறிமுகவுரை நிகழ்த்தினர். ‘ஏபில்’ துணைத்தலைவர் மணி அய்யர் நன்றி கூறினார். இதைத்தொடர்ந்து, தொழில்துறை முதன்மைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், தமிழக அரசின் தொழில்வழிகாட்டி நிறுவன துணைத்தலைவர் எம்.வேல்முருகன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கண்ணையன் உள்பட பலர் பேசினர்.